# உதயன்

சுடர் : 36
கதிர் : 170 | சனிக்கிழமை | வைகாசி 01 ஆம் நாள் 15 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 14 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## தடையை மீறி அன்னதானம்!

25 பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், மே 15
மல்லாகம் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் அன்னதானம் வழங்க ஆயத்தமாகியிருந்த நிலையில், பொலிஸார் மற்றும்

02 ➤

## சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஊக்குவிக்கின்றது பொதுபலசேனா!

அமெரிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 15
சிங்கள பௌத்த பெரும்பான்மை இனத்தின் மேலாதிக்கத்தை ஊக்குவித்து, வலுப்படுத்தும் வகையில் பொதுபலசேனா அமைப்பு செயற்பட்டு வருகின்றது என்று ஐக்கிய அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.
ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம், 2020ஆம் ஆண்டுக்கான

02 ➤

# நாடு முழுமையாக முடக்கம்; வீதியெங்கிலும் இராணுவம்!

கொழும்பு, மே 15
முழு நேரப் பயணக் கட்டுப்பாட்டால் நாடு முற்றாக முடங்கியுள்ளது. வீதிகளில் பெரும் எண்ணிக்கையிலான முப்படையினரும், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

02 ➤



## தூபி உடைப்புத் தொடர்பில் பொலிஸார் விசாரணையாம்

கொழும்பு, மே 15
முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம் சேதமாக்கப்பட்டமைக்கும் பொலிஸாருக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. நினைவுச் சின்னம் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மக்கள் பிரதிநிதிகளால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில்

02 ➤

# யாழ்ப்பாணத்துக்குள் இந்திய திரிபு வைரஸா?

சட்டவிரோதமாக நுழைந்த இருவருக்குத் தொற்று !!
மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பி வைப்பு!!

யாழ்ப்பாணம், மே 15
இந்தியாவின் தமிழகத்திலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் இருவரதும் மாதிரிகள் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக

02 ➤

## கொன்றழிக்கப்பட்ட உறவுகளை நிம்மதியாக உறங்க விடுங்கள்!

தூபி இடிக்கப்பட்டமை படுகேவலமான செயல்
கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கண்டனம்

கொழும்பு, மே 15
'இறுதிப் போரில் சாகடிக்கப்பட்ட எமது உறவுகளை நினைவுகூர்ந்தே முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியை அமைத்திருந்தோம். அதை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பாதுகாப்புடன் அரசு அடித்துடைத்துள்ளது. இது அரசின் படுகேவலமான செயலாகும். இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்

02 ➤

## தெற்கில் இயற்கைப் பேரிடரால் நேற்று மாலைவரை ஐவர் பலி!



கொழும்பு, மே 15
கொரோனாவின் தாண்டவத்தால் தெற்கு பேராபத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில், அங்கு பல மாவட்டங்களில் சீர்றற காலநிலையும் நிலவுகின்றது. வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

02 ➤

## வடக்குக்கு ஒட்சிசன் தாங்கிகள் 18 தேவை

யாழ்ப்பாணம், மே 15
வடக்கு மாகாணத்துக்கு 18 ஒட்சிசன் தாங்கிகள் தேவை என்று கொழும்பு சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்கள் 7, மாவட்ட மருத்துவமனைகள் 4 மற்றும் ஆதார மருத்துவமனைகள் 7 ஆகியவற்றுக்கே ஒட்சிசன் தாங்கிகள்

02 ➤

முச்சந்தி முரளி



"அவையளே உடைச்சிட்டு அவையளே விசாரிக்கிற கூத்து இஞ்ச மட்டும் தான் நடக்கும் கண்டியளோ"

## மின் தாக்கி பெண் சாவு

யாழ்ப்பாணம், மே 15
மின்சாரம் தாக்கி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பப் பெண், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

02 ➤

## 55கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மே 15
சுழிபுரம், புளியந்துறைப் பகுதியில் கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கட்டுமரத்தி

02 ➤

## வடக்கு பி.சி.ஆர். மாதிரிகளில் 12% மீளப்பெறப்படவேண்டியன

யாழ்ப்பாணம், மே 15
வடக்கு மாகாணத்தில் தினமும் பெற்றுக்கொள்ளப்படும் பி.சி.ஆர். மாதிரிகளில் 12 சதவீதமானவை மீளவும் பெறப்படவேண்டும் என்று பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் நிராகரிக்கப்படுகின்ற மாதிரிகள்

02 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு...

இலங்கையில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு நேற்றுமுன்தினம் இரவு 11 மணி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தப் பயணக் கட்டுப்பாடு நாளை மறுதினம் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும்.
முழு நேரப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அனைத்து மாவட்டங்களின் நகரங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.
அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர, வேறு எந்தவொரு தரப்பினரும் வெளியில் செல்லக் கூடாது என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அத்துடன், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் இந்தக் காலப் பகுதியில் மூடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.
எவரேனும் சுகயீனமடையும் பட்சத்தில் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லமுடியும் எனவும் அவர் கூறியுள்ளார். எதிர்வரும் 17ஆம் திகதி வரை வெளியில் செல்ல தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறை செல்லுபடியாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-22)

## தடையை...

சுகாதாரப் பிரிவினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். அத்துடன் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 25க்கும் அதிகமானவர்கள் குடும்பங்களுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுக் காலை குறித்த கோவிலில் அன்னதானம் வழங்குவதற்கான சிறப்பு பூஜை ஏற்பாடாகியிருந்து.
தெல்லிப்பழை பொலிஸார் மற்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு இது தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து, அவர்கள் நேற்றுக் காலை அங்கு சென்றனர்.
அங்கு அன்னதானம் வழங்க ஏற்பாடாகியிருந்த நிலையில், மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (து-26)

## சிங்கள...

சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
இலங்கையில் செயற்பட்டுவரும் சிவில் சமூகக் குழுக்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களின்படி, சமூக வலைத்தளங்களில் மத ரீதியாக, சிறுபான்மையினரை இலக்குவைத்து வெறுப்புணர்வுப் பரப்புரைகளும் கருத்துக்களும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன என்றும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
பொதுபலசேனா உட்பட பௌத்த தேசியவாத அமைப்புக்கள் பல, சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் வகையில் தீவிரமாகப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றன. ஏனைய சிறுபான்மை இனங்களை இழிவுபடுத்தும் விதத்திலும் செயற்பட்டு வருகின்றமையை ஊடக அறிக்கைகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கருத்துக்கள்

எனினும், முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்துக்கு எதிராக வெறுப்புணர்வைப் பரப்புவோருக்கு எதிராக உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் அந்த அமைப்புக்கள் கூறுகின்றன.
கடந்த ஆண்டின் மார்ச் ஜுன் மாதங்களுக்கு இடையிலான காலப்பகுதியில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட வெறுப்புணர்வுக் கருத்துக்கள் தொடர்பில் அரச சார்பற்ற அமைப்பொன்று மதிப்பீடு செய்துள்ளது. அதன்படி இலங்கையின் தேசிய மொழிகள் மூன்றிலும் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும் வெறுப்புணர்வுப் பதிவுகளில் 58 சதவீதமானவை முஸ்லிம் சமூகத்தை அல்லது இஸ்லாமிய மதத்தைத் தாக்குபவையாகவே அமைந்துள்ளன. அதேபோன்று 30 சதவீதமானவை கிறிஸ்தவ மதத்தையும் 5 சதவீதத்துக்கும் குறைவானவை தமிழ் இனம் அல்லது இந்து மதத்தைத் தாக்கும் வகையிலும் அமைந்துள்ளன.
அதேபோன்று சிங்கள மொழியில் மாத்திரம் செய்யப்பட்டுள்ள பதிவுகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 79 சதவீதமான பதிவுகள் முஸ்லிம் இனத்தையோ அல்லது இஸ்லாமிய மதத்தையோ தாக்கும் வகையில் அமைந்துள்ளன. தமிழ் மொழியில் செய்யப்பட்டுள்ள பதிவுகளில் 46 சதவீதமானவை தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும் 35 சதவீதமானவை இஸ்லாமியர்களையும் தாக்கும் விதமாக அமைந்துள்ளன.
முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட மேலும் சில சம்பவங்கள் தொடர்பிலும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. - என்றுள்ளது. (கு-இ)

## தூபி...

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பொலிஸ் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
'நாட்டில் கொரோனாத் தொற்றின் தீவிரத்தையடுத்து முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் ஒன்றுகூடுவதற்கும், நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கும் நாளை தொடக்கம் 22ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவை மீறிச் செயற்படுபவர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவார்கள்' - என்றார்.
நினைவுத் தூபி உடைக்கப்பட்ட மறுநாள் காலை (நேற்றுமுன்தினம்) தூபிக்கு அருகில் இராணுவச் சப்பாத்துக்களின் கால்தடங்கள் மணல் தரையின் அநேகமான இடங்களில் பதிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22)

## யாழ்ப்பாணத்துக்குள்...

ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனால், மிக வேகமாகப் பரவும் தன்மையுள்ள இந்திய வைரஸ் யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவக்கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் தமிழகத்திலிருந்து படகு மூலம் மன்னாருக்கு வந்திருந்தார். அங்கிருந்து பேருந்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டு காரைநகரிலுள்ள கடற்படையினரின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தார். அவருக்கு

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்தியாவிலிருந்து வந்தவர் என்ற அடிப்படையில் அவருக்கு இந்தியாவில் தற்போது வேகமாகப் பரவும் வைரஸ் தொற்றியதா என்பதைக் கண்டறிவதற்கு இவரது மாதிரி சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மேலும் கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகருக்கு இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்த 4 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களில் 9 வயது குழந்தைக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தையின் மாதிரியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கியுள்ள வீட்டின் முதியவருக்கும் தொற்று ஏற்பட்டிருந்தது என தெரிவிக்கப்படுகின்றது. (ம-ஒ.5,26)

## கொன்றழிக்கப்பட்ட...

தெரிவித்தார்.
வன்னியில் இறுதிப் போரில் அரச படைகளால் கொன்றழிக்கப்பட்ட தமிழர்களை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த புதன்கிழமை திடீரென இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்த நினைவு முற்றம் அன்று இரவோடிரவாக சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அங்கு மதகுருமார்களால் புதிதாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.
இந்த அநாகரிகச் செயல்களை வன்மையாகக் கண்டித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., மேலும் தெரிவிக்கையில்;
'இறுதிப் போரில் படையினரால் கொன்றழிக்கப்பட்ட எம் உறவுகளை நிம்மதியாக உறங்க விடுங்கள் என்று அரசிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.
இந்த நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் ஒவ்வொரு இனத்தவர்களும் போரில் இறந்த தமது உறவுகளை நினைவேந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்கு இந்த அனுமதியை தற்போதைய அரசு வழங்க மறுக்கின்றது. அத்துடன், இறந்த தமிழர்களை நினைவுகூர்ந்து வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்டிருக்கும் தூபிகளையும் இடித்தழிப்பதில் இந்த அரசு குறியாக இருக்கின்றது.
இது நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல செயல் அல்ல. அரசின் பயணத்துக்கு ஆரோக்கியமான செயல் அல்ல. இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு உகந்த செயல் அல்ல. இது மிக மோசமான படுகேவலமான செயலாகும். எனவே, இந்தப் படுகேவலமான செயலை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் அதன் விபரீதங்களை அரசு விரைவில் சந்திக்க வேண்டி வரும்' - என்றார். (ம- 22)

## தெற்கில்...

நேற்றுமுன்தினம் காலை முதல் நாட்டின் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் கடும் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. இதனால் தென் மாகாணத்தில் பல பிரதேசங்களில் வெள்ள அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

தொடரும் மழையுடன் கூடிய காலநிலையால் களுத்துறை, கேகாலை, கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு கினிகத்தேனை பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக பொல்பிட்டிய மாதெனியாவத்த பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பேரிடரால் இதுவரை 5 பேர் உயிரிழந்தனர். (ம-22)

## வடக்குக்கு...

தேவை என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கு 10 ஆயிரம் லீற்றர் கொள்ளவுடைய ஒட்சிசன் தாங்கியும், ஒட்சிசன் மவுண்டும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தால் மேற்படி கோரிக்கை சில தினங்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## மின் தாக்கி...

சம்பவத்தில் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த யோகேஸ்வரன் அருந்தினி (வயது -37) என்ற பெண்ணே உயிரிழந்தார். அவர் இரண்டு பிள்ளைகளின் தாய்.
வீட்டின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த தகரப்பந்தலின் கால் ஒன்றைக் குடும்பப்பெண் பிடித்துள்ளார். அதில் மின்குமிழ் பொருத்தப்பட்டிருந்த நிலையில், மின் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் அவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது. அவரைக் காப்பாற்ற அவரது கணவர் முற்பட்டபோது அவருக்கும் மின்சாரம் தாக்கியுள்ளது.
சம்பவத்தையடுத்து குடும்பப்பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனின்றி இரண்டு நாள்களின் பின்னர் உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை நடத்தினார். (து-26)

## 55 கிலோ ...

லிருந்து 55 கிலோ கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.
இளவாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த பகுதியில் தேடுதல் நடத்தி மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. (ம-27,26)

## வடக்கு ...

2 சதவீதமாகவும் காணப்படுகின்றன.
வடக்கில் இந்த மாதத்தின் முதல் இரு வாரங்களில் மாத்திரம் அண்ணளவாக 8 ஆயிரம் பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் அவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
இவற்றில் 911 மாதிரிகள் மீளப்பெறப்பட வேண்டியவை என்று அறிக்கையிடப்பட்டுள்ளன. அத்துடன் 162 மாதிரிகள் நிராகரிக்கப்பட்டவை என்றும் பரிசோதனை முறைகளில் கூறப்பட்டுள்ளன. (ஒ.5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரே நாளில் அசுர வேகத்தில் அதிகரித்த கொரோனா சாவு!

# நேற்று 31 பேர் உயிரிழப்பு 2,289 பேருக்குத் தொற்று

கொழும்பு, மே 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையுடன் கொரோனா சாவு எண்ணிக்கையும் அசுர வேகத்தில் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. நேற்று மாத்திரம் 31 சாவுகள் பதிவாகியுள்ளன. இதுவே நாட்டில் நாளொன்றில் பதிவான அதிகபட்ச கொரோனா சாவு எண்ணிக்கையாகும்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு நேற்றிரவு விடுத்துள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட சாவுகளின் மொத்த எண்ணிக்கை எண்ணிக்கை 923ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 289 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 85 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 108 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும், 27 ஆயிரத்து 54 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## ‘சிலம்பில் குறள் மாந்தர்’ இன்று கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மே 15

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம் நிகழ்வின் கருத்தரங்கு நேரலையில் இன்று நடைபெறவுள்ளது.

‘சிலம்பில் குறள் மாந்தர்’ என்ற கருப்பொருளில் இந்தக் கருத்தமர்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. வலையொளி மூலமாக இதை நேரடியாகப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


நெஞ்சம் நிறைந்த 45ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 20 07 1999

உதிர்வு 01 04 2021



அமரர் வரதராசா ரஜிதா (ரஜி)

எங்கள் குலக்கொழுந்து ரஜிக்குட்டியே

எங்களைத் தவிக்கவிட்டு சென்றது தான் ஏனோ?

பாவையும் முகம் பதிக்க வைக்கிறதே.

எம்மைப் பிரிந்து நீ சென்று நாற்பத்து ஐந்து நாள்கள் ஆனாலும்

என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திருவாய்

இல 32, எம்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர். R.தவராசா (ராசன் மாமா)


## கொரோனா; யாழில் 48, வடக்கில் 60

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 48 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 60 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் 585 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன்படி, முல்லைத்தீவு மருத்துவமனை தனிமைப்படுத்தல் பிரிவில் ஒருவருக்கும்,

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல்நிலைத் தொடர்பாளர்களாக சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். வவுனியா மாவட்ட மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் 2 பேருக்கும், செட்டிகுளம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் ஒருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 6 பேருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் கொடிகாமம் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களின் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களாக தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும், யாழ்.போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் 2 பேருக்கும், பருத்தித்துறை மருத்துவமனையில் 4 பேருக்கும், திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள். பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல்நிலை தொடர்பை வைத்திருந்தவர்கள் என்று பணிப்பாளர் தெரிவித்தார். (த-26)


36ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

குமாரசாமி விநாயகமூர்த்தி

(நெடுந்தீவு மேற்கு)

கடந்த 15.05.1985 அன்று குமுதினிப் படகில் படு கொலை செய்யப்பட்ட எனது சகோதரன் விநாயகமூர்த்தியை 36 ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்

திரு.திருமதி நடராசா தனலட்சுமி (சகோதரி)

மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.


## கொரோனாத் தொற்றால் வடக்கில் ஒருவர் மரணம்

வவுனியா, மே 15

வவுனியா பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 79.

இவர் நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் வவுனியா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் சுகாதாரப் பிரிவினரால் எடுத்துச் செல்லப்பட்டு இரவு 7 மணியளவில் வவுனியா நகரசபையின் பூந்தோட்டத்தில் அமைந்துள்ள மின்சார மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ம-எ-110)

## மூன்றாவது கர்ப்பிணி பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மே 16

குருநாகல் மருத்துவமனையில 28 வயதான கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார். எனினும் குழந்தை சிசேரியன் மூலம் காப்பற்றப்பட்டது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் இலங்கையில் உயிரிழந்த மூன்றாவது கர்ப்பிணிப் பெண்ணாவார். கொரோனா மூன்றாவது அலையில் நூற்றுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்கள் மனதை மேலும் புண்படுத்தாதீர்

*ராஜித சேனாரத்ன கோரிக்கை*

கொழும்பு, மே 15
போரில் உயிரிழந்த தமது சொந்தங்களின் நினைவாகத் தமிழ் மக்களால் நிறுவப்பட்டிருக்கும் நினைவுத் தூபிகளைச் சேதமாக்கி நினைவுச் சின்னங்களை அடித்துடைத்து அவர்களின் மனங்களை மென்மேலும் புண்படுத்த வேண்டாம் என்று அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இறுதிப் போரில் உயிரிழந்த தமது அனைத்து உறவுகளையும் ஓர் இடத்தில் ஒன்றுசேர நினைவுகூரவே முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியைத் தமிழ் மக்கள் நிறுவியிருந்தார்கள். பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தத் தூபி சேதமாக்கப்பட்டுள்ளது எனவும், நினைவுச் சின்னம் அடித்துடைக்கப்பட்டுள்ளது எனவும் ஊடகங்கள் வாயிலாக வெளியான செய்தியையும் படங்களையும் நான் பார்த்தேன். இவற்றைப் பார்த்தவுடன் இறந்த தமது சொந்தங்களைக்கூட நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லையா? என்ற கேள்வி தான் எழுகின்றது, என்றார். (ஒ.5,22)


# படையினருக்குத் தெரியாமல் நினைவுத்தூபி உடைத்தது யார்?



## கோத்தாவிடம் பொன்சேகா கேள்வி

கொழும்பு, மே 15
இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருக்கும் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி அடித்துடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று இராணுவத்தினரும் பொலிஸாரும் கூறியுள்ளனர். அப்படியாயின் நினைவுத் தூபியை அடித்துடைத்தது யார்? பாதுகாப்புப் படையினரின் கண்களுக்குத் தெரியாமல் இரவு நேரத்தில் யார் வந்து நினைவுத் தூபியை அடித்துடைத்தார்கள்?

பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோரிடம் மேற்படி கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பீல்ட் மார்சலுமான சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.
நினைவுத்தூபி இடித்தழிப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாகவே நினைவுத் தூபி நிறுவப்பட்டிருந்தது. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழ் மக்கள் அங்கு சென்று நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த எந்தவித தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை.
ஆனால், இந்த அரசு நினைவேந்தல் நிகழ்வை நடத்தத் தடை விதித்தது மட்டுமன்றி முள்ளிவாய்க்காலில் நிறுவப்பட்டிருந்த நினைவுத் தூபியையும் அடித்துடைக்க வழியமைத்துக் கொடுத்துள்ளது. நினைவுத் தூபியை அடித்துடைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ராஜபக்ச அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் தமிழ் மக்களைப் பழிவாங்கும் விதத்தில் செயற்படுகின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்- என்றார். (ஒ.5,22)



# நினைவுத் தூபியை உடைக்கும் தேவை இராணுவத்துக்கு இல்லை

*இராணுவப் பேச்சாளர்*

கொழும்பு, மே 15
முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி உடைக்கப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.
பல வருடங்களுக்கு மேலாக குறித்த நினைவுத் தூபி அந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், இராணுவம் அந்த நினைவுத் தூபியை உடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறான பின்னணியில், தற்போது அந்த நினைவுத் தூபியை உடைக்க வேண்டிய தேவை தமக்குக் கிடையாது எனவும் அவர் மேலும் கூறினார். (ஒ.5,22)

# சஹ்ரானின் அடிப்படைவாதம் போதித்தாரென ஒருவர் கைது

திருமலை,மே 15
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
திருகோணமலை முதூர் பிரதேசத்தில் மாணவர்களுக்கு அடிப்படைவாதத்தைப் போதித்தார் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இவரைக் கைது செய்துள்ளனர்.
க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு குறித்த நபர் அடிப்படைவாதத்தைப் போதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் மூதூர் இக்பால் வீதியைச் சேர்ந்த 38 வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார். இவரால் 2018 ஆம் ஆண்டில் அடிப்படைவாத வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன என்று ஆரம்பக் [illegible] (ஏ-4)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற வடக்குவாசிகள் கைதாகினர்

கொழும்பு,மே 15
சட்ட விரோதமான முறையில் கடல்மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சிலாபம் பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.
படகு ஒன்றில் இவர்கள் பயணம் செய்வதற்குத் தயாரான நிலையில் இருந்த போது, கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.(ஏ-4)

# ஊடகவியலாளர்களுக்கு படையினரால் இடையூறு

யாழ்ப்பாணம், மே 15
தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு விதிக்கப்பட்ட, பயணத்தடையை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரங்கள் அனைத்தும் முழுமையாக முடங்கியுள்ளது. இந்த நிலையில் குறித்த கள நிலைமைகளை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளருக்கு இராணுவத்தரப்பால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
நாட்டில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றை அடுத்து அரசு நேற்றுமுன்தினம் இரவு 11 மணியிலிருந்து வரும் திங்கட்கிழமை வரை முழுமையான பயணத் தடையை அறிவித்திருந்தது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புத் தரப்பினருக்கும் சுகாதாரப் பிரிவினருக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரப் பிரிவும், பாதுகாப்பு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டமும் முழுமையாக முடங்கியுள்ளது.
மாங்குளம் பகுதியில் வீதித்தடையில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற செயற்பாடுகளை ஒளிப்படம், காணொலி எடுக்க ஊடகவியலாளருக்கு தடை விதித்தனர். இதனைத் தொடர்ந்து மாங்குளம் நகரப்பகுதியில் கடைகள் பூட்டப்பட்டிருக்கின்ற நிலைமைகளை ஒளிப்படம், காணொலி எடுக்கவும் மாங்குளம் நகர் பகுதியில் நின்ற இராணுவத்தினர் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.
நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தை காரணம் காட்டி வடக்கு கிழக்கில் அதிகளவான இராணுவச் சோதனைச் சாவடிகளும் இராணுவ கெடுபிடிகளும் காணப்படுகின்றன என்று பல்வேறுதரப்பினரும், குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீதி விடு தூது!


கொரோனாப் பெருந்தொற்றால் மிகப்பெரும் நெருக்கடியை இடரை இலங்கைத் தீவு எதிர்கொண்டுள்ள நிலையில், இன்னொரு சுமையாக வந்தமைந்துள்ளன இயற்கைச்சீற்றங்கள். தென்னிலங்கையின் பல பகுதிகளில் அண்மைக்காலமாக கடும் மழையுடனான காலநிலை நிலவுகின்றது. இன்னும் பல பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பேரிடர்களால் இறப்புக்களும் பதிவாகியுள்ளன என்பது துயரம்தான். ஆனால் இங்கே ஆழ்ந்து கவனிக்க வேண்டிய – தமிழர்களின் மரபு ரீதியான நம்பிக்கையுடன் தொடர்புடைய விடயமும் இருக்கின்றது.

2009ஆம் ஆண்டு இறுதிப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பல்லாயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். குருதிச் சகதிக்குள் குளித்தெழுந்தது முள்ளிவாய்க்கால். இறுதிப் போரின் போது இலங்கை அரசால் தமிழர்கள் மீது இனப்படுகொலை நடத்தப்பட்டது என்கின்றன சர்வதேச நாடுகள். கனடா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கிட்டவேண்டும் என்று திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகின்றன. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளை நினைவுகூருவதற்காக 'இனப்படுகொலை வாரம்' கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள்ளது கனடா. இவ்வாறு அவலச்சாவு அடைந்தவர்களுக்கான நீதி ஒருமுனையில் மறுக்கப்பட்டு – எட்டாக்கனியாக இருக்கின்ற நிலையில், இந்த இயற்கைச்சீற்றங்கள் விஞ்ஞானத்தைத் தாண்டிய எண்ணவோட்டங்களை மனதில் எழுப்பவே செய்கின்றன.

இறந்த ஆத்துமாக்கள் இயற்கையுடன் ஒன்றித்திருப்பார்கள் என்பது தமிழர்களின் நம்பிக்கை. அத்தகைய ஆத்துமாக்களின் சாந்திக்காக ஏகப்பட்ட சடங்குகளையும் நாம் கடைக்கொள்கின்றோம். எனவே இலங்கையின் தென்பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் இடம்பெறும் இயற்கை இடர்களுக்குக் காரணம் முள்ளிவாய்க்காலில் குருதி சிந்தி, உடல் அங்கங்கள் சிதைந்து, துடித்துத்துடித்து இறந்தவர்களின் நீதி கோரும் அருவமான குரலே இது என்று எண்ணுவதில் தவறொன்றும் இல்லை.

மே மாதம் இயற்கைச் சீற்றங்கள் இலங்கையில் ஏற்படுவது வழமைதான். ஆனால், 2009ஆம் ஆண்டின் பின்னர் அந்தச் சீற்றங்கள் அகோரம் மிக்கவையாக – உயிரிழப்புக்களை ஏற்படுத்த வல்லவையாக நிகழ்கின்றன என்பதுதான் அவதானிப்பு. அதுவும் இந்தப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டதன்படி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் இந்தப் பேரவலங்கள் வருடாவருடம் ஏன் இடம்பெற வேண்டும்?.

முழுக்க முழுக்க அரசியலும் சுயநலமும் மிக்க இந்த உலகில், தமது அவலச் சாவுக்கு நீதி என்பது நிலைநாட்டப்படாது என்பதை அறிந்த இறந்த ஆத்துமாக்கள், தமக்கான நீதி கோரி தாமே இயற்கை மூலம் தூதுவிட ஆரம்பித்துவிட்டன போலும். அதற்காக தென்னிலங்கையில் இந்த இயற்கை இடரால் ஏற்பட்டுள்ள இறப்புக்கள் சரியானவை. அவை நிகழத்தான் வேண்டும் என்று குறிப்பிடுவது இந்தப் பத்தியின் நோக்கம் அல்ல. இயற்கைச் சீற்றங்களால் பறிபோயிருப்பதும் ஏதுமறியா அப்பாவி உயிர்கள் தான். எனினும், சதையும் சதைத் துண்டுகளுமாக முள்ளிவாய்க்காலில் குருதிச் சகதிக்குள் மூழ்கடிக்கப்பட்ட எம் உறவுகளுக்கு நீதி வழங்க வேண்டுமென்பதை குறைந்தபட்சம் இயற்கையாவது ஆட்சியாளர்களுக்கும், போர்க்குற்றாவாளிகளுக்கும் நினைவூட்டட்டும்!




## உள்நாட்டில்

# பொறுப்புக்கூறலை மேற்கொள்ளாத மொஹான் பீரிஸுக்கு வாக்களிக்காதீர்

## உலக நாடுகளிடம் ஜஸ்மின் சூக்கா கோரிக்கை



**ஜெகனஸ்பேர்க், மே 15**

**சட்டமா அதிபராக இருந்து பொறுப்புக் கூறலை நிலைநாட்டாத மொஹான் பீரிஸை சர்வதேச சட்ட ஆணையத்துக்குத் தெரிவுசெய்வதற்கு உலக நாடுகள் வாக்களிக்கக் கூடாது என்று உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா கோரியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சர்வதேச அமைப்புக்களையும் சட்ட ஆட்சியையும் சீர்குலைக்கும் ஒரு அதிர்ச்சியளிக்கும் முயற்சியாக இலங்கையானது ஐக்கிய நாடுகளின் சர்வதேச சட்ட ஆணையகத்துக்கான தேர்தலுக்கு வேட்பாளரை முன்மொழிந்துள்ளது.

இவர் நாட்டினுடைய பிரதான சட்ட அதிகாரியாக இருந்த அவரது பதவிக் காலத்தில் வலிந்து காணாமற்போதல், படுகொலை, சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வு ஆகியவற்றுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த தவறியமையால் அவர் தவறிழைத்தவராக உள்ளார்.

மொஹான் பீரிஸ் தற்போது நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக உள்ளார். ஆனால் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை இலங்கையினுடைய சட்டமா அதிபராக கடமையாற்றியுள்ளதுடன் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரணை செய்வதற்கு அல்லது வழக்குத் தொடர்வதற்கு தவறியிருக்கிறார்.

"ஐ.நா.வினுடைய சர்வதேச சட்ட ஆணையகமானது தண்டனையிலிருந்து பாதுகாப்பு, நாடு கடத்தல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற விடயங்களில் தன்னுடைய அண்மைய சில வேலைகளுடன் சர்வதேச சட்டங்களை முறைப்படுத்துகின்றது. அனைத்து சட்டவாளர்கள் மற்றும் நியாயமான உலக ஒழுங்கைப் பற்றி அக்கறை கொண்டவர்கள் அனைவரும் இந்த மனிதருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று ஐ.நா. பொதுச் சபையின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்' என்று 'பீரிஸின் அவதானிப்பின் கீழ் மோசமான சர்வதேச குற்றங்கள் இலங்கை பாதுகாப்பு படைகளால் புரியப்பட்டன என குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்காக எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.வில் அவர் இலங்கையுடைய உயரிய இராஜதந்திரியாக நியமிக்கப்பட்டமையானது இலங்கை பொறுப்புக்கூறலை புறக்கணிப்பது தொடர்பான ஒரு மோசமான சமிக்ஞையை ஏற்கனவே சர்வதேச சமூகத்துக்கு அனுப்பியது. அத்துடன் நீதியை இன்னமும் பெற்றுக்கொள்ளாத ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களின் முகத்தில் விழுந்த ஒரு அடியாக இருந்தது' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'இவரது காலத்தில் இலங்கையில் பத்திரிகையாளர்கள் தமது பணியைச் செய்தமைக்காக கடத்தப்பட்டு, காணாமற்போய், படுகொலை செய்யப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டார்கள். அவரது மற்றும் அவரது அரசின் பதிவுகளை வெள்ளையடிக்க உதவும் இந்த வேலைக்கான அவரது நியமனத்துக்கு எதிராக எங்களுடன் உலகம் முழுவதிலுமுள்ள ஊடக உரிமைகள் குழுக்கள் ஒன்றாக நிற்க வேண்டும்' என இலங்கை பத்திரிகையாளர்களுக்கான ஜனநாயகம் என்ற அமைப்பைச் சேர்ந்த பாசனா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

'இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக சர்வதேச சட்டத் தலையீட்டை கோரும் நம்பத்தகுந்த ஆதாரங்களை அம்பலமாக்கியவர்கள் பத்திரிகையாளர்கள். சர்வதேச சட்டத்தை தீர்மானிக்கும் ஒரு உலகளாவிய அமைப்புக்கு பத்திரிகையாளர்களுக்கு நீதியை மறுத்த ஒருவரை நியமித்தல் ஒரு கோழிக்கூட்டை ஒரு குள்ளநரியிடம் ஒப்படைப்பதற்கு ஒப்பானதாக இருக்கும்' – என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார அரசுகூட துணியாத ஈனச் செயலே தூபி இடிப்பு!!

## 'பொ பொ' இயக்கம் கண்டனம்

**மட்டக்களப்பு, மே 15**

**நினைவேந்தல் தூபி இடிப்பு என்பது, சமகால நாகரீக உலகில் எந்தவோர் சராசரி அல்லது சர்வதிகார அரசும் செய்யத்துணியாத மிக ஈனத்தனமான இழிச்செயலாகும் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.**

முள்ளிவாய்க்கல் இன அழிப்பு நினைவுச்சின்னத்தை இடித்தழித்த ஈனச்செயலுக்கு கண்டனம் தெரிவித்து வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

நவீன காட்டுமிராண்டித்தனத்தின் உச்சத்தின் வெளிப்பாடாகிய இவ் இன வன்முறை வெறியாட்டத்தை எண்ணி இன்றைய ஆட்சியாளர்கள் வெட்கித்தலைகுனிய வேண்டும்.

இன அழிப்புக்கு பதினொரு வருடங்கள் கழிந்தும் எவ்வித நீதியும் கிடைக்காது ஏக்கத்துடனும் கலக்கத்துடனும் வேதனையுடனும் இருக்கும் ஈழத்தமிழினத்துக்கு இச்செயலானது வெந்த புண்ணில் வேலைப் பாச்சியது போல உள்ளத்தில் ஆறாத ரணமாக மாறியுள்ளது.

இறந்தவர்களைக் கூட நினைவுகூர அனுமதியளிக்காதவர்கள் வாழ்பவர்களுக்கு உரிமைகளை கொடுப்பார்களா? நினைவுச்சின்னங்களே இருக்க அனுமதிகாதவர்கள் மக்களின் வாழ்வுரிமையை அங்கீகரிப்பார்களா? இவர்களிடம் நீதியையும் உரிமையையும் எப்படி எதிர்பார்ப்பது? இதனால்தான் சர்வதேசத்தை நோக்கி ஈழத்தமிழினம் குரலெழுப்புகிறது.

இவ் ஈனத்தனமான இழிச்செயலுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதோடு இவ்வாறான செயற்பாடுகள் இனிமேலும் நடக்காதபடி நீதிக்காகவும் மானிட நேயத்துக்காவும் உண்மைக்காகவும் ஒன்றிணைந்து செயற்படுமாறு சர்வதேச சமூகத்தையும், மானிடநேய செயற்பாட்டாளர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஓ.150)

## மக்களின் அவல ஓலங்கள் கட்சிகளின் மனதை தட்டவேண்டும்

*சொல்கிறார் செல்வம் எம்.பி.*

முல்லைத்தீவு, மே 15

தமிழ் மக்களின் நினைவுத்தூபிகள் சிதைக்கப்படுகின்றன. இந்த நேரத்தில் எங்கள் மக்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். எங்கள் தேசத்தை மண்ணை காப்பாற்றவேண்டும். படு கொலையான எங்கள் மக்களின் அவல ஓலங்கள் இன்று சர்வதேசத்தின் கதவுகளைத் தட்டியது. எங்கள் கட்சிகளதும், மக்களின் மனங்களையும் அது தட்டவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர் மலையில் இராணுவத்தின் புடைசூழ பிக்குகள் பிரித்ஓத புத்தரின் சிலை வைக்கும் நிகழ்வு பெரும் விழாக்கோலமாக நடக்கின்றது. ஆனால் தமிழ் மக்களின் நினைவேந்தலை மாத்திரம் வீடுகளிலிருந்து மேற்கொள்ளவேண்டும் என்று இராணுவத் தளபதி சொல்கின்றார். இந்த நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது என்பது இதிலிருந்தே தெரிகின்றது. தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்று இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது. சாதாரண மக்களை வதைக்கும் சட்டங்கள் அறிவிப்புக்கள் எல்லாம் பிக்குகளுக்கு விதிவிலக்கு. இதனை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியிருக்கின்றது- என்றார். (ஓ.19)

## நினைவுத்தூபி அழிப்பும் மற்றொரு இனப்படுகொலை

*கூறுகிறார் சிவசக்தி ஆனந்தன்*

வவுனியா, மே 15


முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை சேதப்படுத்தியதன் ஊடாக இன்னொரு இனப்படுகொலையை இலங்கை அரசு செய்துள்ளது. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இராணுவ நிர்வாகமானது ஜனநாயகத்துக்கான அனைத்து வழிகளையும் முடக்குகின்றது. போரில் உயிரிழந்தவர்களையும் நினைவுகூருவதற்கான வழியையும் முடக்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக தமிழ் இனத்தின் மீதான அடக்கு முறையை அரசு பிரயோகிக்கின்றமை அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

அடக்கு முறைகள் ஊடாக அனைத்து உரிமைகளையும் பறித்து தமிழினத்தை அடிமைகளாக வைத்திருக்கும் இந் நிலமையை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொண்டு பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனியாவது முன்வரவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலே எத்தனையோ வாக்குறுதிகள் வழங்கப்பட்டதுடன் அந்த தரப்புக்களும் தமிழர் தரப்புக்கு எத்தனையோ அறிவுரைகளை வழங்கி விட்டுக்கொடுப்புக்களை செய்யுமாறு கூறியிருந்தார்கள். அதனடிப்படையில் அவர்களும் இதற்குப் பொறுப்பாளிகள் தான். உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தேலை தடைசெய்யும் விடயமானது நீதிக்காக போராடும் இனத்தை ஒட்டுமொத்தமாக இல்லாமல் செய்யும் செயற்பாடு என்பதுடன் இன்னொரு இன அழிப்புக்கான முயற்சி- என்றுள்ளது. (ஓ.110)



## கனவில்கூட தமிழர்களை எதிரியாக நோக்கும் சிங்களம்

*கண்டனம் தெரிவிக்கிறார் வீ.எஸ்.சிவகரன்*

மன்னார், மே 15

இனவழிப்பு போர் முடிவுக்கு வந்து 12ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும், தமிழர்களை கனவிலும் எதிரியாகவே சிங்கள தேசம் நோக்குகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நினைவுத்தூபியை, இனப்படுகொலைக்குள்ளாக்கியவர்களே இரவோடு இரவாக இடிதகற்றியது பாசிச ஆட்சியின் வெளிப்பாடே. தமிழர்களின் கல்லறை நினைவுகள் கூட இந்த மண்ணிலே இருக்கக் கூடாது என்பதில் சிங்கள தேசம் பெருமுனைப்புக் கொள்கிறது என்பது வேதனையே. அழுவதற்கு கூட அழித்தவனிடம் அனுமதி கோரும் துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்களின் வாழ்வியல் காணப்படுவதே மிகுந்த துர்ப்பாக்கியம். 12 ஆண்டுகளாக நீதி கோரி உலகம் எம்மினம் உறவுகளுக்காக, பொது வெளியில் ஓலமிட்டு அழ முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டது என்பது உலகில் எந்த இனத்துக்கும் ஏற்படக்கூடாத பெரும் சாபமே.

இனவிடுதலைக்காக வீறு கொண்டு போராடிய இனம் உறவுகளின் நினைவுக் கல்லறைக்காக போராட வேண்டிய கொடுமைக்குள்ளாக்கப் பட்டுள்ளளது என்பது சகிக்க முடியாத பெருந்துன்பமே.

இனப்படுகொலை நினைவுகளை தமிழ் மக்களின் மனங்களிலிருந்து அகற்றிவிடலாம் என்று அரசு படாத பாடுபடுகிறது. அதற்கு கொரோனாவும் துணை நிற்கிறது. ரணங்களும் வலிகளும் ஏமாற்றங்களும் எமக்கு புதியவை அல்ல. அதை கண்டு நாம் அச்சப்பட கோழைகளும் அல்ல என்பதை சிங்கள தேசம் நன்கு உணரவேண்டும்.

மனிதாபிமானத்தைக் கூட விலை பேசும் கொடுங்கோல் ஆட்சியாளர்களிடம் இதை விட வேறு என்ன எதிர்பார்க்க முடியும். ஆகவே தடைகளை மீறி இன அழிப்புக்குள் ளான எம் உறவுகளுக்காக மே 18ல் உணர்வு பூர்வமாக அஞ்ச

## நிலைமாறு நீதியை மிதிக்கிறது இலங்கை

**பச்சிலைப்பள்ளி தவிசாளர் சுரேன் தெரிவிப்பு**

கிளிநொச்சி, மே 15

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அழித்தமை ஊடாக நிலைமாறுகால நீதிக் கோட்பாட்டை இலங்கை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது என்று பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிப்போரின் போது உறவுகளைப் பறிகொடுத்த இழப்பும், துயரமும் இன்னமும் ஆறாத எம்மவர்கள் ஆறுதல்களின் இருப்பிடமாகவே முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை நோக்கினர்.

ஆட்சிக்கு வரும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையுள்ள அரசுகள் இறந்தவர்களை பொதுவெளியில் நினைந்துருகத் தடை விதித்தும், நினைவிடங்களை இடித்தழித்தும் அட்டூழியங்களை செய்கின்றபோதே எம் மீள் நினைவுகள் மனதை நெரிடுகின்றன. இதனால் நிலைமாறுகால நீதியை எட்டிப் பிடிக்க இயலாத நிலை காணப்படுகின்றது.

எம் இனத்தின் கண்ணீருக்கும் காத்திருப்புக்கும் என்றோ ஒருநாள் விடை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, எம் உறவுகளை நெஞ்சிருத்தி அஞ்சலிப்போம், -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனஒடுக்குமுறையின் பரிணாமத்தை உலகுக்கு வெளிபடுத்தியுள்ளது அரசு

## கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.



யாழ்ப்பாணம், மே 15

உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியை இடிப்பதன் மூலம், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனஒடுக்குமுறையின் பரிமாணத்தை உலகுக்கு அரசாகவே வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்புத் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் உயிரிழந்தவர்களை நினைவுகூருவது மாத்திரமல்ல. உயிரிழந்தவர்களின் நினைவாக தூபியை வைத்திருக்கவும் அனுமதிக்க மாட்டோம் என்று இந்த அரசு தெளிவாக நிரூபித்துள்ளது.

இந்த அரசின் செயற்பாடுகள் எதிர்பார்த்ததுதான். எனினும், இவ்வளவு தூரம் இனஒடுக்குமுறையை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயம். இவர்களிடமிருந்து தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாதென்பதையும் தெளிவாக புலப்படுத்தியுள்ள இந்த மோசமான நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம். உயிரிழந்த உறவுகளை அஞ்சலிக்கும் தமிழ் மக்களின் உரிமையை எவரும் தடுக்க முடியாது- என்றார். (ஒ.5)



# நினைவேந்தலை நிச்சயம் செய்வோம்

## சாள்ஸ் அழைப்பு

மன்னார். மே 15

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நாம் நினைவேந்தலைச் செய்யவேண்டும். அதனைத் தடுப்பதற்காக நினைவுச் சின்னத்தையே இடித்தழிக்கும் இவர்களுக்கு. அமைதியான முறையில் நினைவேந்தலைச் செய்து பதிலடி கொடுப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் போது எங்கள் மக்களை கொன்ற அரசே ஆட்சியில் இருக்கின்றது. தமிழினம் இலங்கையில் வாழ்ந்தது என்ற பதிவே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. கொரோனாத் தொற்றைக் காரணமாகக் கூறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்க அரசு முயற்சிக்கின்றது. முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டிருக்கின்றது. நடுகல் களவாடப்பட்டுள்ளது. ஒரு இனத்தின் மனதை புண்படுத்துகின்ற கொடூரமான செயற்பாடுகளை ஜனாதிபதியும் அவரது அரச படைகளும் முன்னெடுத்து வருகின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சமூக இடைவெளிகளைப் பேணியவாறு சுகாதாரப் பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்ளவேண்டும்- என்றார்:. (ஒ.213)

# நினைவுத்தூபி இடிப்பு மானங்கெட்ட பிழைப்பு

## சாடுகிறார் மனோ



கொழும்பு, மே 15

மாண்டவர்கள் மீதான நிந்தனை அரசியல் ஒரு மானங்கெட்ட பிழைப்பு என்பதை, அரசுக்குள்ளே இருக்கும் தமிழர்கள் ஜனாதிபதிக்கு கூற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கொரோனா நோய் ஒழிப்பில் தோல்வி, துறைமுக நகர் சீனாவுக்கு தாரைவார்ப்பு ஆகிய நாட்டின் உண்மையான தேசிய பிரச்சினைகளை சிங்கள மக்களின் கவனத்துக்கு வராமல் தடுக்க, அவ்வப்போது தமிழ், முஸ்லிம் மக்களின்மீது இனவாதம் காட்டி தேசிய கவனத்தை வேறு பக்கம் கொண்டுபோகும் அரசின் நீண்டநாள் தந்திர அரசியல் ஒரு மானங்கெட்ட அரசியல் பிழைப்பு என்பதை, அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

தெற்கில் கிளர்ச்சிகளின் போது கொல்லப்பட்ட சிங்கள மக்களின் நினைவாக நிறுவப்பட்டுள்ள தூபிகளைப் போன்று, போரில் மாண்ட தமிழ் மக்களின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி, இலங்கை இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நொறுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டவட்டமான மானங்கெட்ட செய்கையை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், மாண்டவர்களை நிந்திக்கும் இந்த அநாகரீக செயலை கண்டிக்கும்படி சிங்கள முற்போக்கு சக்திகளையும், பௌத்த சமூக தலைவர்களை

# தமிழர்களின் இதயங்களையே அடித்து நொருக்கியுள்ளார்கள்

## சிறிதரன் எம்.பி. வேதனை

கிளிநொச்சி, மே 15

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழித்தது தமிழ் மக்களுடைய இதயங்களை அடித்து நொருக்கியதற்கு சமனான செயலாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் இறுதிக் கட்டத்தில் அந்த மக்களுக்கு உணவு அனுப்பாமல், கஞ்சிக்காக பச்சைக் குழந்தைகள் வரிசையில் நின்றபோது கொத்துக் குண்டுகளை வீசி அவர்களைக் கொன்றார்கள். இவ்வாறு சாகடிக்கப்பட்டவர்களின் வரலாற்று நினைவிடமாக இருந்தது முள்ளிவாய்க்கால். அந்த நினைவுத்தூபியையே சேதப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தத் தூபியின் இரண்டு கைகளையும் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்தே உடைத்து அகற்றியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் அவர்களுடைய இறந்த உறவுகளை கூட நினைவுகூருவதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் அவர்களுடைய இறந்துபோன உறவுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் செய்கின்ற நினைவேந்தல் கடமைகளை செய்ய விடாது தடுக்கும் நோக்கோடு சிங்கள பௌத்த மேலாதிக்க அரசின் காட்டுமிராண்டித்தனமான இந்தச் செயற்பாட்டை கண்டிக்கின்றேன்- என்றார். (ஒ.26)



# எவ்வளவு மிலேச்சத்தனமாக நடந்தாலும் மே 18ஆம் நாளை நினைவுகூருவோம்!!!

## விக்னேஸ்வரன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மே 15

அரசு எத்தனை மிலேச்சத்தனமான செயற்பாடுகளை மேற்கொண்டாலும் மே 18 ஆம் திகதி அன்று நாம் எந்தவிதமான அச்சமும் இன்றி கொரோனா சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக படுகொலை செய்யப்பட்ட எமது மக்களை உணர்வுபூர்வமாக நினைவுகூர இப்பொழுதே தயாராகுவோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசின் தூபி உடைப்பு செயற்பாடு தமிழ் மக்களின் இதயங்களை மிகவும் இரணப்படுத்தி இருந்தாலும், எமக்கு இது ஆச்சரியத்தை அளிக்கவில்லை. ஏனென்றால் பல மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்கு எதிராக இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் கொன்று குவித்ததுடன் மட்டும் நின்றுவிடாமல், துயிலும் இல்லங்களை உழவு இயந்திரம் கொண்டு உழுது அழித்திருந்தார்கள். அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு எத்தகைய கேவலமான செயற்பாடுகளையும் செய்யலாம் என்ற சிந்தனையில் செயற்படும் இந்த அரசு தனது தலையில் தானே மண்ணை அள்ளி வாரிக்கொட்டிக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை உலகம் வெகு விரைவில் ஏற்றுக்கொள்ளத்தான் போகின்றது. அரசின் இத்தகைய முட்டாள்தனமான செயற்பாடுகள் இந்த உண்மையை இப்போதும் மறைக்க முடியாது.

ஆர்மேனியாவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை இத்தனை காலம் கடந்தபின்னர் அமெரிக்கா இப்போது தான் ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

அரச படைகள் இதனைச் செய்யவில்லை என்று அறிக்கை விட்டிருக்கின்றார்கள். அப்படியானால் குறித்த நினைவுத்தூபி முள்ளிவாய்க்காலில் தொடர்ந்து நிரந்தரமாக இருப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள் போல் தெரிகின்றது.

விரைவில் எமது மக்கள் புதிய நினைவுத் தூபியை அதே இடத்தில் தாபிக்க அரசாங்கமும் படைகளும் இடமளிப்பார்கள் என்பதா இதன் அர்த்தம்?, என்று அந்த ஊடக அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுப் பயணத் தடையால் முடங்கியது நாடு

அரசால் அறிவிக்கப்பட்டுள்ள முழுப் பயணத் தடையால் நேற்று நாட்டின் இயல்பு நிலைமை முற்றாக முடக்கப்பட்டது. பொதுமக்களின் அநாவசிய நடமாட்டங்கள் பொலிஸார் மற்றும் முப்படையினரால் கட்டுப்படுத்தப்பட்டன. வடக்கு மாகாணமும் முற்றாக முடங்கியது. முக்கிய நகரங்களில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அநாவசியமாக வீதிகளில் நடமாடியவர்கள் எச்சரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.








யாழ்ப்பாணம்



வவுனியா









மன்னார்



கிளிநொச்சி



கொழும்பு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன மழையால் வெள்ளப் பெருக்கு



கம்பஹா

தென்கிழக்கு அரேபிய கடற்பரப்புக்களில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்தம் காரணமாக மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுடனான காலநிலை நிலவுகின்றது. அதனால் ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதுடன், பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதேவேளை, மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருந்தது.





கேகாலை



## 'பியர்' ரின்களுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 15

விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 72 பியர் ரின்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம்பொலிஸாருக்குகடந்த புதன்கிழமை கிடைத்த இரகசியத்தகவலையடுத்து கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-316)

## ஹெரோய்னுடன் பெண் கைது

வவுனியா, மே 15

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 2 கிராம் 750 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)

## எல்லை கடந்த 229 பேர் திருப்பி அனுப்பட்டனர்



யாழ்ப்பாணம், மே 15

மாகாண எல்லை கட்டுப்பாட்டைமீறி பயணிப்பதற்கு முற்பட்ட 229 பேர் நேற்று முன்தினம் திருப்பியனுப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள் என. மே 31 ஆம் திகதிவரை பயணத் தடை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள சேவைகளை முன்னெடுப்பவர்கள் மாத்திரமே உரிய அனுமதியுடன் மாகாண எல்லையைத் தாண்டி பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலா செல்லுதல், உறவினர்களின் வீடுகளுக்கு பயணித்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு மாகாண எல்லையைத் தாண்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதனை மீறினால் சட்டவிரோத நடவடிக்கையாக கருதப்பட்டு அந்நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் குற்றவியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் கடந்த 12 ஆம் திகதி 145 வாகனங்களில் மாகாண எல்லையை கடப்பதற்கு முயற்சித்த 229 பேர் திருப்பி அனுப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்

## வெசாக் வழிபாடுகளை வீட்டில் அனுஷ்டியுங்கள்

### மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை

கொழும்பு,மே 15

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களதும், தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதால், எதிர்வரும் வெசாக் பூரணை தின மதவழிபாடுகளை வீடுகளில் அனுஷ்டியுங்கள். இவ்வாறு மகாநாயக்க தேரர்கள் பௌத்த மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். விகாரைகள் மற்றும் வெளியிடங்களில் மக்களை ஒன்றுதிரட்டுதல், தானங்கள் வழங்குதல், வெசாக் அலங்காரத் தோரணைகளை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளைத் தவிர்த்து, சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமைவாக மக்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)



## விமானப் படை தயாரித்த ஒட்சிசன் சிகிச்சை பிரிவு



கொழும்பு, மே 15

சுவாசக் கோளாறு உள்ள நோயாளர்களின் பயன்பாட்டுக்காக இலங்கை விமானப் படையால் தயாரிக்கப்பட்ட வெப்ப ஈரப்பதமூட்டப்பட்ட ஒட்சிசன் சிகிச்சை பிரிவு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கொரோனா தொற்று நோய் நிலைமைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், சுகாதாரத் துறையில் சர்வதேச தூதுவரான வித்யாஜோதி, கலாநிதி பந்துல விஜேவின் எண்ணக்கருவில் பேராசிரியர் [illegible]னில் டி [illegible] மற்றும் வைத்தியர் திலங்க [illegible]பால உள்ளிட்ட முன்னணி மருத்துவ நிபுணர்கள் குழுவின் பங்களிப்புடன் இந்த உபகரணத் தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனம் சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளுக்கு அதிக அளவு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலை ஒட்சிசனை முழு ஈரப்பதத்தில் வழங்குகிறது.

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவின் வழிகாட்டுதலின் பேரில், விமானப்படை கட்டளை அதிகாரி குரூப் கேப்டன் பிரசன்ன மார்டினோவின் மேற்பார்வையில் விமானப்படையின் பொறியியல் பிரிவின் விமான பராமரிப்பு பிரிவால் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வரையறைகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் செயல்திறன் தரங்களை சரிபார்த்த பிறகு, இது இலங்கை தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மொரட்டுவ பல்கலைக்கழகம் இதன் மின் பாதுகாப்பு தரங்களின் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த சாதனத்தை உற்பத்தி செய்வதற்காக 15 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தாலும், 3 லட்சம் ரூபா என்ற குறைந்த செலவில் உற்பத்தி நடவடிக்கைகள் நிறைவுபெற்றுள்ளன. தற்போது, 50 உபகரண தொகுதிகளை உற்பத்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன், சுகாதாரத் துறையின் தேவைக்கேற்ப தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாதுகாப்பு செயலாளர் (ஓய்வு பெற்ற) ஜெனரல் கமால் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் சஞ்சீவ முனசிங்க மற்றும் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரண ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்கிக் கொண்டிருந்தபோது புதையுண்ட ஐவரும் மீட்பு

## கினிகத்தேனவில் சம்பவம்

**ஹற்றன்,மே 15**

**வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில், அதில் தாய் மற்றும் அவரது மகள் உட்பட ஐவர் மண்ணுக்குள் புதையுண்டனர். எனினும் பிரதேச மக்களதும், லக்ஸ்பான இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரதும் பெரும் முயற்சியால் அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.**

இந்தச் சம்பவம் கினிகத்தேனப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மகளும், தாயும் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் வீட்டின் படுக்கையறை கடும் சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மலையகத்தில் தொடர்ந்தும் மழை பெய்தால், மலைப்பாங்கான பகுதிகளில் மண் சரிவு ஏற்படக்கூடும் என்று நுவரெலியா மாவட்ட 'அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ-4)

# மண்மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு



கொழும்பு,மே 15

வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்தது. அதில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வரக்காப்பொல கஸ்னாவப் பகுதியில் நேற்று நடந்துள்ளது.

சம்பவத்தில் 54 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (எ-4)

# சில மாகாணங்களில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு,மே 15

நாட்டின் சில மாகாணங்களில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைவாக சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேற்கு மாகாணங்களில் மழை பெய்யக்கூடும்.

அத்துடன் மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும், காலி மாவட்டத்திலும், 100 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி பதிவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (எ-4)

# களனி கங்கையின் நீர் மட்டம் உயர்வு

கொழும்பு,மே 15

நாட்டில் தற்போது நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக, களனி கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது என்று நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புசபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கொழும்பு, வத்தளை, பியகம, கொலன்னாவை, கடுவளை, சீதாவாக்கை, தொம்பே, ருவான்வெல்ல மற்றும் தெஹியோவிட்ட உள்ளிட்ட கங்கையை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று நீர்வழங்கல் சபை அறிவுறுத்தியுள்ளது. (எ-4)

# காதல் விவகாரத்தால் மாணவன் கொலை!

கொழும்பு, மே 15

17 வயது மாணவன் ஒருவனை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் ஆராச்சிக்கட்டுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைக்குக் காதல் விவகாரமே காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லதரங்கட்டுவ, அட்டரங்கனவில் வசிக்கும் பாடசாலை மாணவன் ஒருவனே அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, அவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்தவர்கள் வழிமறித்து கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவன், 10 நாள்கள் சிகிச்சையின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கு காதல் விவகாரம் காரணம் என்று கூறப்படுகின்றது. 17 வயதான இந்த மாணவன், அதே பகுதியைச் சேர்ந்த 14 வயது மாணவி ஒருவரைக் காதலித்துள்ளார்.

இந்தக் காதல் விவகாரம் தெரிந்து மாணவியின் உறவினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதனால் இரு தரப்பு உறவினர்களுக்கும் இடையே முரண்பாடும், மோதலும் ஏற்பட்டுள்ளது.

இந்த முரண்பாடுகள் தொடர்பில் முன்னரும் ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்திருந்தன என்று கூறப்படுகின்றது. இந்த மோதல்களின் தொடர்ச்சியாகவே மாணவன் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு,மே 15

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக பிரதான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. கனியன், நோட்டன்பிரிட்ஜ், உடவலவ மற்றும் குலே கங்கை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.

இதனால் நீர்த்தேக்கங்களை அண்மித்த மற்றும் தாழ்வான நிலப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (எ-4)



# முன்னுதாரணமா?

வவுனியா,மே.15

நாடு முழுவதும், கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முகக்கவசம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மூத்த பொதுச் சுகாதார பரிசோதகரொருவர் முகக்கவசத்தை சரியாக அணியாது முகக்கவசம் அணிய வலியுறுத்தும் பதாகையைக் காட்சிப்படுத்தியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா புதிய பஸ் நிலையம் உட்பட பல இடங்களில் பொதுஇடங்களுக்கு செல்லும்போது முகக்கவசம் அணியுங்கள் என விழிப்புணர்வு பதாகைகள் சுகாதாரத் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டன. வவுனியா பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பல அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தக் காட்சிப்படுத்தலில் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த பதாகையைக் காட்சிப்படுத்திய பின்னர் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் சமூக இடைவெளியைப் பின்பற்றாமல் ஒளிப்படம் எடுத்துக்கொண்டதுடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் முகக்கவசத்தை தாடையில் அணிந்து, முகக்கவசம் அணியுமாறு வலியுறுத்தும் பதாகைக்கு அருகில் நின்று பிழையான முன்னு

# வெள்ளத்தில் கம்பஹா

கொரோனாத் தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் மற்றொரு துயரும் மக்களை வாட்டியெடுத்துள்ளது.

அந்த மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக, பல கிராமங்களின் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்ப



அத்தனகல்ல ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக, கம்பஹா மாவட்டத்திலுள்ள கஹட்டோவிட்ட, பஸ்யாலை மற்றும்

கொட உள்ளிட்ட பகுதிகள் வெள்ளப்பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதால், பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெருந்துயரை அனுபவித்து வருகின்றனர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரப் பகுதியில் இராணுவம் ரோந்து நடவடிக்கை

**யாழ்ப்பாணம், மே 15**
**யாழ்ப்பாண நகரப் பகுதியில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் படையணி, ரோந்து நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.**



நாட்டில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு பூராகவும் மூன்று நாள்களுக்கு பொதுமக்கள் வீடுகளைவிட்டு வெளியேறாத வண்ணம் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாண குடாநாட்டின் முதன்மை வீதிகளில் ரோந்து நடவடிக்கையில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தியாவசிய தேவை மற்றும் மருத்துவ சேவையை பெறும் நோக்கில் பயணிப்போர் தவிர்ந்த ஏனையோரை இடைநிறுத்தி எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். (ஐ-26)



## மூடப்பட்டிருந்த கடற்கரை வீதி சாவ. நகரசபையால் திறப்பு

கொடிகாமம், மே 15

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த கடற்கரை வீதி ஒன்று கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நகரசபையால், பொலிஸாரின் உதவியோடு மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மக்களின் பாவனையில் இருந்த கச்சாய் வீதி ஒழுங்கை எண்02 என்ற வீதி தனியார் ஒருவரால் கடற்கரைக்கு செல்ல முடியாதவாறு வருடக்கணக்கில் அடைத்து வைத்திருந்த நிலையில், அப் பகுதி மக்கள் நகரசபையிடம் இது தொடர்பாக முறையிட்டனர். இதனை அடுத்தே நகர சபையினர் மீண்டும் குறித்த வீதியை மக்கள் பாவனைக்காகத் திறந்தனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் மேலும் சில கடற்கரை வீதிகள் தனியாரால் கடற்கரைக்கு பொதுமக்கள் செல்ல முடியாதவாறு தமது காணியுடன் சேர்த்து அடைத்து வைத்திருக்கும் நிலை காணப்படுகின்றது என்றும், இதனால் மீனவர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-159)



## ஆர்.பி.ஜி. குண்டு கண்டுபிடிப்பு

கொடிகாமம்.மே 15

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் ஆர்.பி.ஜி .குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டுவில் ஜே -311 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றை துப்புரவு செய்ய முயன்ற போது பழைய காலத்துக்கு உட்பட்ட ஆர். பி.ஜி குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-20)

## ‘கூட்டுறவு தொடர்பான சட்டத்தொகுப்பு’ நூல் வடிவில் வெளியீடு

கொடிகாமம், மே 15

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையால் வெளியிடப்பட்ட “கூட்டுறவு தொடர்பான சட்டத்தொகுப்பு” கற்றல் நோக்கத்துக்காக நூல் வடிவில் உருவாக்கப்பட்டு கடந்த புதன்கிழமை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில் நேரடியாகச் சென்று கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலனிடம் சபையின் உறுப்பினர் செ.மகேஸ்வரனும், தொடர்ந்து யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சியாமளா சண்முகலிங்கத்திடம் சபையின் செயலாளர் த.ரமேஸ்குமானும் கையளித்தனர். (ஐ-159)



## திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம்

இணுவில்.மே 15

இணுவில் பொது நூலக தகவல் தொழில் நுட்ப மையக் கட்டடத்தில் திறன் வகுப்பறை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் ஸ்ரீ நகையகத்தின் ஆதரவில் சிவா தர்மராஜா நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ஐ)



# சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை

## சாவ. நகர சபை உறுப்பினர்கள் கடும் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, மே. 15

சாவகச்சேரி நகரப் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸாருக்கு சபையின் உறுப்பினர்களால் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என உறுப்பினர்கள் சரமாரியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். சாவகச்சேரி நகரசபையின்அமர்வு நேற்றுமுன்தினம் சபையின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. .சபையின் தவிசாளர் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அமர்வுக்கு வந்திருந்தார். சபை அமர்வு நடைபெற்ற போது பொலிஸ் உத்தியோகத்தர் வருகை தந்ததால் அமர்வின் செயற்பாடுகளை நிறுத்தி. உறுப்பினர்கள் தமது குறைபாடுகளைக் தெரிவிக்கலாம் என தவிசாளர் கேட்டுக்கொண்டார். உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளை குறிப்பிட்டு உரையாற்றினர். உறுப்பினர் சு.நிதிகேசன் உரையாற்றுகையில்; நகரப்பகுதியின் சில இடங்களில் பகிரங்கமாக கஞ்சா விற்பனை தாராளமாக கோரி அது தொடர்பான தீர்மானங்கள் சபை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. எனினும் பொலிஸார் சட்டவிரோத செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவு நல்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. வட்டாரங்களில் சில இடங்கள் போதைப்பொருள் பாவனை நிலையங்களாகக் காணப்படுகின்றன என தகவல் வழங்கப்படுகின்ற போதிலும் உடனடி நடவடிக்கை எடுப்பதில்லை என்றார்.

உறுப்பினர் ம.நடனதேவன் உரையாற்றுகையில்; மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில். நாம் கொரோனா காலத்தில் சேவைகளை வழங்கிய வேளைகளில் உறுப்பினர் என்ற வகையில் எமக்கு ஆதரவு வழங்க மறுத்து எம்மைக் கேவலப்படுத்தும் வாக்கியங்களை பொலிஸார் பிரயோகித்தனர்.

இவ்வாறான செயல் எமது சேவைகளைக் கொச்சைப்படுத்தும் செயலாக உள்ளது என்றார்.

உறுப்பினர் யோ. ஜெயக்குமார் உரையாற்றுகையில்; சாவகச்சேரி சந்தியிலி தண்டவாளம் வரையான பகுதியை ஒரு வழிப் பாதையாக மாற்றுமாறு சபையில் ஒரு வருடத்துக்கு முன்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொலிஸாரை நடைமுறைப்படுத்துமாறு அறிவித்து இன்று வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை .இதனால் மக்கள் பெரும் சிரமங்களை தினமும் எதிர்நோக்குகின்றனர் என்றார்.

உறுப்பினர் க.தர்சன் உரையாற்றுகையில்; சாவகச்சேரி இந்துக் கல்லூரி தொடக்கம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வரையான ஏ 9 வீதியில் வரும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துமாறு சபையில் தீர்மானம், எடுக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்காத்தால் தினமும் வேகக் கட்டுப்பாடுகளை இழக்கும் வாகனங்களால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்றார். இந்தக் குற்றச்சாட்டுக்களை கேட்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மேலதிகாரிக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா குழப்பத்திலும் துறைமுக நகர விவாதம்!

**கொழும்பு, மே 15**
**நாட்டில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள கொழும்பு துறைமுக நகர் சட்ட வரைவு தொடர்பான விவாதம் எதிர்வரும் 18ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் நடைபெற்றவுள்ளது.**



நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்று தினங்கள் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைபு தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை,கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு சட்டவரைபு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானம் கடந்த வாரம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்த சட்ட வரைவுக்கு எதிர்க்கட்சி உட்பட பல கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. அரசு கொரோனா நிலைமையைப் பயன்படுத்தி சட்ட வரைவை நிறைவேற்றிக்கொள்ள முற்படுகின்றது என்று எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியிருந்தது. (எ-இ)

# அனைவருக்கும் தடுப்பூசி; ராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 15
நாட்டில் கொவிட் 19 தடுப்பூசியைப் பெறுவதற்கு ஏற்புடைய அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொரோனா ஒழிப்பு தொடர்பான செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டவர்களுக்கு, 2ஆவது டோஸை வழங்கவேண்டியுள்ளது. அதற்கு தேவையான தடுப்பூசியை பிரிதொரு நாட்டிலிருந்து வாங்குவதற்கான இராஜதந்திர மட்டத்திலான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. லலித் வீரதுங்க தலைமையிலான குழுவினர் இவ்விவகாரத்தைக் கையாள்கின்றனர்.
13 மில்லியன் ஸ்புட்னிக் தடுப்பூசிகள் ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளன. இன்னும் ஓரிரு நாள்களில் 6 லட்சம் தடுப்பூசிகள் வரவுள்ளன. அதேபோல் ஜூன் மாத இறுதியில் அல்லது ஜூலை மாத ஆரம்பத்தில் 9 லட்சம் பைசர் என்ற தடுப்பூசிகள் கொண்டு வரப்படும். இந்தத் தடுப்பூசியை ஒரு தடவை மட்டும் செலுத்தினால் போதுமானதாக இருக்கும். இந்தத் தடுப்பூசி வர்க்கரீதியிலும் 5 மில்லியன் வரை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டிய அனைவருக்கும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-44)

# விழுந்ததெல்லாம் அழுவதற்கல்ல எழுவதற்கே!

## சீமான் அறைகூவல்



சென்னை, மே 15
கொரோனா காரணமாக இனப்படுகொலை நாளை நினைவுகூர தமிழர்கள் யாவரும் தத்தம் வீடுகளிலேயே நினைவேந்தலை முன்னெடுக்க வேண்டுமென உள்ளன்போடு அழைக்கின்றேன். அவரவர் வீடுகளில் எழுச்சிச் சுடரேற்றி, இன மீட்சிக்கு உறுதிமொழியேற்று, முள்ளி வாய்க்கால் இனப் படுகொலையில் உயிரிழந்த உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்க வேண்டுமென உலகத்தமிழர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றேன். இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறைகூவல் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,
தமிழ் இனம்பட்ட கொடுந்துயருக்கும், இழைக்கப்பட்ட பெரும் அநீதிக்கும் பன்னாட்டு சமூகத்திடமும், அனைத்து நாடுகளிடமும் நீதிகேட்டு உலகெங்கும் வாழும் தமிழர்கள் இன்றளவும் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறோம். இனப்படுகொலை செய்த இலங்கை அரசின் மீது பன்னாட்டு போர்க்குற்ற விசாரணையையும், ஈழத் தாயகத் துக்கான பொதுவாக்கெடுப்பையும் நடத்தக்கோரி போராடிக் கொண்டிருக்கிறோம்.
மே18, தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் குண்டுவீசிகொலை செய்யப்பட்டு, ஈழ நிலம் முழுவதும் இரத்தச் சகதியிலே நனைந்து, ஒப்பாரியும், ஓலமும் நாட்புறமும் எதிரொலிக்க இரண்டு லட்சம் தமிழர்களின் பிணக்குவியல்கள் மத்தியில், முள்ளிவாய்க்கால் நிலத்தில் யாவும் முற்றுப்பெற்று விட்டன என இன எதிரிகள் எக்காள மிட்டு சிரித்த நாள்.
எவ்விடத்தில் தமிழர்கள் முடிவுற்றனர் என சிங்களப் பேரினவாதமும், பன்னாட்டுச்சமூகமும் கருதியதோ அவ்விடத்திலேயே, 'வீழ்வோம் என்று நினைத்தீரோ?' என்று கேள்வி எழுப்பி, 'விழ விழ எழுவோம்! ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம்! விழுந்ததெல்லாம் அழுவதற்கல்ல எழுவதற்கே!' எனும் இன மீட்சி முழக்கத்தை முன் வைத்து தமிழ்த் தேசிய இனம் மீண்டெழ வேண்டியது காலக்கடமையாகிறது. இன விடுதலைக்களத்தில் நமது உறவுகள் பட்ட பெருந்துயரை உலகுக்கு உணர்த்திட இல்லங்களிலே இருந்தவண்ணம் உலகம் முழுமைக்கும் பரப்புரை செய்திடுவோம்.
உள்ளத்தில் அணையா பெருநெருப்பாய் பற்றியெரியும் இன உணர்வை அடைகாத்து அதனை மற்றவருக்கும் பற்ற வைத்து இன விடுதலையை வென்றெடுக்கச் சூளுரைப்போம் - என்றுள்ளது. (ஏ.இ)



# கத்திக்குத்தில் சிறுவன் காயம்

கிளிநொச்சி.மே 15
கத்திக்குத்துக்கு இலக்கான சிறுவன் ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளம் கிராமத்தில் கடந்த [illegible]கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவனே இவ்வாறு கத்திக் குத்துக்கு இலக்கானார். நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் கத்திக் குத்தில் முடிவடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

# சட்டவிரோத மணல் அகழ்வு: தருமபுரத்தில் ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 15
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூரில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில ஜே.சி.பி. இயந்திரச் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஜே.சி.பி. இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
தருமபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகலுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளது.
கைது செய்யப்பட்டவர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அதேவேளை, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் இருந்து 420 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# நானாட்டான் பிரதேச சபையில் அஞ்சலி

மன்னார், மே 15
முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு நானாட்டான் பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.
நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது சபை அமர்வு நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் [illegible]பரஞ்சோதி தலைமையில் நேற்று முன்தினம் காலை 9 45 மணியளவில் ஆரம்பமானது. இலங்கையில் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரின்போது முள்ளி வாய்க்கால் மண்ணில் படுகொலைசெய்யப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வுகளை நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜீவன் ஒழுங்குபடுத்தினார். (எ-213)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நாட்டின் சட்டத்தை மீறி கட்டுப்பாடுகள் விதிப்பு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு.மே 15
நாட்டின் சட்டத்துக்கு முரணான வகையில், அரசால் போக்குவரத்து உட்பட ஏனைய கட்டுப்பாடுகள் தற்போது விதிக்கப்பட்டுள்ளன. இதனை சவாலுக்கு உட்படுத்தினால் அரசுக்கே ஆபத்து ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உயர் நீதின்றில் அடிப்படை உரிமைகள் மனுத்தாக்கல் செய்யப்பட்டால், அனைத்துக் கட்டுப்பாடுகளையும் உடன் ரத்து செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் மூன்று நாள்களுக்கு ஊரடங்குச் சட்டத்தைப் பிரயோகிக்காது சட்டத்துக்கு அப்பால் சென்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இது நாட்டின் சட்டத்துக்கு முரணானதாகும். சட்டத்துக்கு அப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கட்டுப்பாடுகளை நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த முடியும். அவ்வாறு எவரேனும் ஒரு குடிமகன் மனுத் தாக்கல் செய்தால், அனைத்து கட்டுப்பாடுகளையும் விலக்கிக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படும்.

பொதுமக்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரம் 1947 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால் 1932 ஆம் ஆண்டில் இங்கிலாந்து காலணித்துவத்தில் பிரயோகிக்கப்பட்ட சட்டமே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை சுயாதீன நாடு என்பதை அரசு மறந்து செயற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# மாதந்தோறும் 20 கர்ப்பிணிகளின் உயிருக்கு ஆபத்து



## மகப்பேற்று நிபுணர் அதிர்ச்சி தகவல்

கொழும்பு.மே 15
நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளமையால், மாதந்தோறும் சுமார் 20 கர்ப்பிணிகள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று மகப்பேற்று மருத்துவர் சனத் லன்ரோல் தகவல் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை சுமார் 3 லட்சத்து 40 ஆயிரம் கர்ப்பிணிகள் அதிக ஆபத்தில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி வழங்குமாறு பல கோரிக்கைகள் விடுத்துள்ள போதும், கொரோனாத் தடுப்பூசி கிடைக்கவில்லை. இந்த நிலைமை காரணமாக அடுத்த தலைமுறை ஆபத்தில் உள்ளது.

நாட்டில் கர்ப்பிணிகளே அதிக பாதிப்பில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# 30 வயதானவர்களுக்கு அடுத்த வாரம் தடுப்பூசி

கொழும்பு.மே 15
மேல்மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் அடுத்த வாரம் முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று தொலைநோக்கு கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளின் போது, கொரோனாப் பரவலை சிறந்த முறையில் கட்டுப்படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கை 10 ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

எனினும் புதுவருடக் காலப்பகுதியில் சுகாதார பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக, இன்னொரு கொத்தணி உருவாகியது. இந்த விடயத்தில் அரசைக் குறைகூறுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

பலம் வாய்ந்த நாடுகளால் கூட கொரோனாத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது. எனவே பொதுமக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். புதுவருட கொத்தணித் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் துரிதகரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

மேல் மாகாணத்தில் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளதால், அங்கு 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன- என்றார். (எ-4)


# 42 கிராமங்கள் தனிமையில்

கொழும்பு.மே 15
கொரோனாத் தொற்றுக் காரணமாக, 3 மாவட்டங்களில் 42 கிராம சேவகர் பிரிவுகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதற்கமைவாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில், 42 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, திருகோணமலை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 8 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# அபாய கட்டத்திலிருந்து நாடு மீளவில்லை

## மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்கின்றது சுகாதாரப்பிரிவு





கொழும்பு.மே 15
நாடு கொரோனாத் தொற்று அபாய கட்டத்திலிருந்து இன்னும் மீளவில்லை. பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி இதனைக் கட்டுப்படுத்த முடியாது என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் நாளாந்தம் சுமார் 2 ஆயிரத்து 500 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் தினங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அத்துடன் இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும். எனவே தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மிக இறுக்கமாக மக்கள் பின்பற்ற வேண்டும். நாட்டில் ஒரே நாளில் சுமார் 25 ஆயிரம் தொற்றாளர்கள் சிகிச்சை பெறும் நிலைமையும் உருவாகியுள்ளது. இந்த அபாய நிலைமையை மக்கள் உணர்ந்து சுகாதாரப் பாதுகாப்புடன் செயற்பட வேண்

# கல்முனை பொலிஸாருக்கு நேற்று கொரோனாத் தடுப்பூசி



கல்முனை. மே 15
நாட்டில் பரவலாகப் பரவி வரும் கொரோனாவை கட்டுப்படுத்தும் நோக்கில் கல்முனை பொலிஸாருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜி .சுகுணனின் வழிகாட்டலில், கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ.ஆர். எம் .அஸ்மி தலைமையில் இந்த கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையில், கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் [illegible]

கல்முனை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர், கே.டீ. சுஜித் பிரியந்த, கல்முனை பொலிஸ் நிலைய பெரும் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெமீல் உட்பட கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் கொரோனா தடுப்பூசியை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பால்மா இன்றி குழந்தைகள் தவிப்பு

## பாலூட்டும் தாய்மார் கவலை

**கொடிகாமம் மே 15**

**தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு பால்மா வகைகள் வழங்காததால் பால்மா பைக்கற்றுக்களை வாங்க முடியாத நிலையில் மிகவும் சிரமப்படுகிறோம் என்று தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் பாலூட்டும் தாய்மார்கள் தெரிவித்துள்ளனர்.**



தனிமைப்படுத்தப்பட்ட கொடிகாமம் மத்தி மற்றும் கொடிகாமம் வடக்கு ஆகிய பிரிவுகள் கடந்த ஒரு வாரமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் தொழிலை இழந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அங்குள்ள குழந்தைகளுக்கு பால்மா வகைகள் வழங்கப்படவில்லை.

இப் பிர குழந்தைகளைக் கருத்தில் எடுக்கவும் இல்லை, பால்மா வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் விவசாயம், கூலி, சீவல் ஆகிய தொழில்களில் ஈடுபடுவோர் தற்போது தொழிலை இழந்து வருமானமின்றி இருக்கும் நிலையில் பால்மா வாங்க முடியாது தொழிலுமின்றி பணமுமின்றி செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைக் கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கான பால்மா வகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-159)

# சுகாதார நடைமுறைகளை மீறியதாலேயே சமூக மட்டத்தில் பரவியது கொரோனா

## சாவ. சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் சுட்டிக்காட்டு

கொடிகாமம் மே 15

தற்போது கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட ஒருவர் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர் ஒருவர் அண்மைய நாள்களில் சுகாதார நடைமுறைகளை சரியாக பின்பற்றாத சனநெருக்கம் அதிகமுள்ள இடங்களுக்கு அடிக்கடி சென்று வந்தவர்களாகவே இருக்கிறார்கள். இதனால் தான் கொரோனாத் தொற்று ஏற்பட்டு வீட்டில் உள்ளவர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

அவ்வாறு சென்று வந்தவர்கள் தமக்கு கொவிட் 19 அறிகுறிகள் தென்பட்ட போது அதனை அலட்சியம் செய்ததன் விளைவாக வீட்டில் உள்ள முதியவர்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் கொவிட் 19 அறிகுறிகளுடன் மேலதிக சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது. எனவே அனை வரும் சரியான முறையில் முகக்கவசம் அணிதல், அடிக்கடி தொற்று நீக்கி பாவித்து கை கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணல் போன்ற சுகாதார நடை முறைகளை கடைப்பிடிக்கவேண்டும் - என்றனர். (ப-159)

# அரச பணியாளர்களுக்கு நிலவேம்பு குடிநீர்

## தென்மராட்சி சமூக சித்த மருத்துவரால் ஏற்பாடு

சாவகச்சேரி, மே 15

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும், சாவகச்சேரி பிரதேச சபையிலும், கொடிகாமம் தபாலகத்திலும் தொற்று அதிகரிக்காது இருப்பதற்கான நடவடிக்கைக்காக, சமூக சித்த மருத்துவரது அறிவுறுதலுக்கமைய காரியாலயங்களில் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டதுடன், வேது பிடிக்கும் கருவியும் பொருத்தப்பட்டுள்ளது.

இவற்றின் பயன்பாடுகள்பற்றி வைத்தியர் திருமதி றஜிதா கனகசுந்தரம் தெரிவிக்கையில்;

ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானால் அவருக்கு ஏற்படும் அறிகுறிகள் கண்களால் கண்டறிய முடியாதவை, அவரால் மட்டும் உணரக் கூடிய அறிகுறிகள் மட்டுமே தோன்றுகின்றன. உதாரணமாக காய்ச்சல், தொண்டை நோ போன்றன. இதனால் யாருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பதை கண்டறிய முடியாது உள்ளது. அது மட்டுமல்ல சிலருக்கு எந்த ஒரு அறிகுறிகளும் இல்லாத நிலையும் உள்ளது. ஒரு காரியாலயத்தை எடுத்துக்கொண்டால் அங்கே கொரோனாத் தொற்றுக்குள்ளாகி அறிகுறிகள் தெரியாதவர்களும் இருக்கலாம், அறிகுறிகள் தெரிந்தும் அதனை சொல்லாதவர்களும் இருக்கலாம். நாம் எவ்வாறு நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களை இனங்காண்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோமோ அதேபோல் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களை தீவிரம் அடையாது காப்பாற்ற வேண்டியது மருத்துவர்களாகிய எமது கடமை. அந்த வகையில் தொற்றால் ஏற்படக்கூடிய காய்ச்சலில் இருந்து நிவாரணம் கிடைக்கவும், கிருமித் தொற்றின்போது உடலின் நோய் எதிர்ப்பு தன்மையை அதிகரிக்கவும் நிலவேம்பு குடிநீரைப் பருகச் சொல்கிறேன். அதே போல் கொரோனாத் தொற்று ஏற்பட்டு தீவிர நிலை அடையும்போது சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட வாய்ப்பு உண்டு. சாதாரண தடிமல், காய்ச்சல் நிலையில் ஏற்படும் மூக்கடைப்பைப் போக்க நாம் சுடுதண்ணீரில் தேசி இலை, சஞ்சீவி இலை போன்றவற்றை இட்டு வேது பிடித்து நிவாரணம் பெறுவது போல் ஓர் வேதுக்கருவியை அமைத்து அதில் சுவாசிப்பாதை தடைபடுத்தலை அகற்றக்கூடிய மூலிகை இலைகளையும், நுண்ணங்கிகளை அழிக்கக்கூடிய மூலிகை இலைகளையும் இட்டு வேது பிடிப்பதால் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களை மூச்சுத் திணறல் ஏற்படாது காப்பாற்றுவதுடன் அவர் மூலமான தொற்றையும் குறைக்கலாம் என நம்புகிறேன் - என்றார். (ப-159)

# பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை பொலிஸார் தீவிரமாகக் கண்காணிக்கவும்

## மன்.மாவட்டச் செயலக கூட்டத்தில் வலியுறுத்து

மன்னார், மே 15

மக்கள் செறிந்து இருக்கும் இடங்களில் பலர் கொரோனாத் தொற்றுத் தொடர்பாக விதிக்கப்பட்டிருக்கும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது வருவதையிட்டு கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் பொலிஸார் இதுவிடயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என மன்னார் மாவட்ட செயலகத்தில் இது தொடர்பில் இடம்பெற்ற கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி மெல் தலைமையில் சம்பந்தப்பட்ட திணைக்கள முக்கியஸ்தர்களுடன் கடந்த செவ்வாய்க் கிழமை மாவட்டச் செயலகத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது "ஏனைய மாவட்டங்களைப் போன்று மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றானது மிகவும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருப்பதையிட்டு நாம் சுகாதாரப் பகுதினருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் அத்துடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றும் பொதுமக்களுக்கும் நன்றி கூறுகிறோம்" என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

மக்கள் செறிந்துள்ள இடங்களான மன்னார் பஸ் நிலையம் மற்றும் பேசாலை ஆகிய பகுதிகளில் பலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதுள்ளனர். ஆகவே பொலிஸார் இது தொடர்பாக தீவிர கவனம் செலுத்தவேண்டும் என கூட்டத்தில் கலந்துகொண்டோரால் வலியுறுத்தப்பட்டது. (ப-60)

# கொவிட் சிகிச்சைகளை மேற்கொள்ள பெரும் சவாலாக ஆளணிப் பற்றாக்குறை

## கிளி. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே 15

கொவிட் 19 சிகிச்சைகளை மேற்கொள்வதில் ஆளணிப் பற்றாக்குறை பெரும் சவாலாக உள்ளது என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரணவபவன் தெரிவித்தார்.

முறிகண்டிப் பகுதியில் இன்று புதிதாக கொவிட் 19 சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனைப் பார்வையிட்டு சேவைகளை விஸ்தரிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் முறிகண்டிப் பகுதியில் தடுப்பு சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இதில் 300 வரையான கொரோனா நோயாளர்களைப் பராமரிக்க கூடியதாக இருக்கும். அதைவிட கிளிநொச்சியில் இதுவரை கிருஷ்ணபுரத்தில் உள்ள தொற்றுநோயியல் மருத்துவமனையில் 160 நோயாளிகளும், பாரதிபுரம் சிகிச்சை நிலையத்தில் 200 நோயாளிகளும், எதிர்வரும் நாள்களில் இந்த சிகிச்சை நிலையத்தில் 300 நோயாளிகளும், கட்டைக்காட்டில் 315 நோயாளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். அது தவிர்ந்து 6 தனிமைப்படுத்தல் நிலையங்களும் இயங்கி வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் கண்டு வருகின்றோம். அவர்களில் அனைவரும் கொழும்பு, காலி, கண்டி மாவட்டங்களிலிருந்து வந்தவர்களாக உள்ளனர். உள்ளூர் பரவல் நிலை தற்போதுவரை ஏற்படவில்லை. வந்தவர்களை தனிமைப்படுத்தியும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தியும் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. மக்களின் கட்டுப்பாடற்ற செயலால் பரவலானது கட்டுப்பாட்டை மீறிச்சென்றுவிடுமோ என்ற பயம் உள்ளது. மரணச்சடங்குகள், கொண்டாட்டங்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறு பல்வேறு வழிகளிலும் அறிவுறுத்தினாலும் அவர்கள் நிலையை உணர்ந்து மக்கள் செயற்பட்டால் கொவிட் பரவலை கட்டுப்படுத்த முடியும். ஆளணிப் பற்றாக்குறையின் மத்தியிலேயே சேவையை வழங்க வேண்டிய சூழ்நிலை எமக்கு இருக்கின்றது. இருந்த போதிலும் இருக்கின்ற ஆளணியைவைத்து சேவைகளை வழங்கி வருகின்றோம். அதனால் ஊழியர்களுக்கான விடுமுறை உள்ளிட்ட பிரச்சினைகள் தோன்றுகின்றன. குறிப்பாக மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் தாதிய உதவியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது. இத்தனைக்கும் மத்தியில் எமது சுகாதார ஊழியர்கள் தம்மை அர்ப்பணித்து சேவையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org